| Article Date | Headline / Summary | Publication |
| --- | --- | --- |
| 31 May 2026 | Embedded insurance protects electronic items... Do you know why it's important? | Nanayam Vikatan(Tamil) |



# எலெக்ட்ரானிக் பொருள்களை பாதுகாக்கும் எம்பெடெட் இன்ஷூரன்ஸ்... ஏன் முக்கியம் தெரியுமா?

காப்பீடு என்பது நமக்கும் சரி, நம் உடைமைகளுக்கும் சரி... ஒரு பாதுகாப்புக் கவசம் எனலாம். முன்பெல்லாம் காப்பீடு என்பது அதற்கென தனியாக மெனக்கெட்டு பல திட்டங்களை ஒப்பிட்டு வாங்க வேண்டிய சிக்கலான நிதிச் சேவையாக இருந்தது. ஆனால், தற்போது அந்த நிலை வேகமாக மாறி வருகிறது. இன்று காப்பீடு என்பது தனித்த திட்டமாக இல்லாமல், மக்கள் தினசரி பயன்படுத்தும் பொருள்கள் மற்றும் சேவைகளுடன் இணைக்கப்பட்ட பாதுகாப்பு வசதியாக மாறியுள்ளது.

உதாரணமாக, ரயில் டிக்கெட் பதிவு செய்யும் போது சில ரூபாய்க்கு விபத்துக் காப்பீடு சேர்க்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதுபோன்ற முறையே 'எம்பெடெட் காப்பீடு' (*Embedded Insurance*) எனப்படுகிறது. ஒரு பொருளை வாங்கும் தருணத்திலேயே அதற்கான பாதுகாப்பு காப்பீடும் சேர்த்து வழங்கப்படுவது எம்பெடெட் காப்பீடு. தனியாக காப்பீட்டு அலுவலகம் செல்ல வேண்டிய அவசியமோ, பல படிவங்கள் நிரப்ப வேண்டிய சிரமமோ இதில் இல்லை.

உதாரணமாக, செல்பேசி வாங்கும் போது திருட்டு மற்றும் சேத பாதுகாப்பு வழங்கப்படுகிறது. மடிக்கணினி வாங்கும்போது பழுது பாதுகாப்பு இணைக்கப்படுகிறது. ஸ்மார்ட் கடிகாரம் போன்ற சாதனங்களுக்கு உடைந்து போகுதலில் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இவை அனைத்தும் பொருள் வாங்கும் நேரத்திலேயே சேர்க்கப்பட்டிருக்கும்.

### இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் நடைமுறை!

இந்தியாவில் செல்பேசி மற்றும் மின்னணு சாதனங்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இணையத்தின் மூலம் பொருள்கள் வாங்கும் மக்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து உயர்கிறது. இதனால் மின்னணு சாதன காப்பீட்டு சந்தை வேகமாக வளர்ந்து வருகிறது.

இன்று பல இணைய விற்பனை தளங்களிலும், மின்னணு சாதன கடைகளிலும் இந்த வசதி வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் குறைந்த கட்டணத்தில் உடனடி பாதுகாப்பைப் பெறுகின்றனர். இந்தியாவின் மின்னணு சாதனங்களுக்கான காப்பீட்டுச் சந்தை 2025 முதல் 2030 வரை ஆண்டுதோறும் சுமார் 4% கூட்டு வளர்ச்சி விகிதத்தில் வளர்ச்சி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்மார்ட்

**அமர்நாத் சக்சேனா,**
தலைமை தொழில்நுட்ப அதிகாரி – வர்த்தகப் பிரிவு, பஜாஜ்
ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட்



போன் பயன்பாடு அதிகரித்தல் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட நுகர்வோர் பழக்கவழக்கங்கள் இந்த வளர்ச்சிக்கான முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன.

**இரண்டு வகையான காப்பீட்டு முறை!**

எம்பெடெட் காப்பீட்டில் பொதுவாக இரண்டு விதமான நடைமுறைகள் உள்ளன.

முதல் முறை, வாடிக்கையாளருக்கு விருப்பத் தேர்வு வழங்கப்படும் முறை. இதில் பொருள் வாங்கும்போது கூடுதல் தொகை செலுத்தி காப்பீட்டைச் சேர்க்கலாம்.

இரண்டாவது முறை, காப்பீட்டுக் கட்டணம் ஏற்கெனவே பொருளின் விலைக்குள் சேர்க்கப்பட்டிருக்கும் முறை. இதில் தனியாகத் தேர்வு செய்ய வேண்டிய அவசியமில்லை.

**கிடைக்கும் முக்கிய நன்மைகள்!**

எம்பெடெட் காப்பீட்டின் மிகப் பெரிய பலன் எளிமை. தனியாகக் காப்பீடு தேடி செல்ல வேண்டியதில்லை. பொருள் வாங்கும் அதே நேரத்தில் பாதுகாப்பும் கிடைக்கிறது. இரண்டாவது முக்கிய நன்மை, குறைந்த செலவு. பெரும்பாலான நிறுவனங்கள் கூட்டாகக் காப்பீடு வழங்குவதால் கட்டணம் குறைவாக இருக்கும்.

மூன்றாவது நன்மை, விரைவான சேவை. இப்போது புகார் பதிவு, ஆவண சமர்ப்பிப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகை பெறுதல் போன்ற அனைத்தும் இணையத்தின் மூலம் வேகமாக நடைபெறுகின்றன.

**நீட்டிக்கப்பட்ட உத்தரவாதம் என்றால் என்ன?**

எம்பெடெட் காப்பீட்டுடன் சேர்த்து, 'நீட்டிக்கப்பட்ட உத்தரவாதம்' என்ற வசதியும் முக்கியமானதாக உள்ளது. பொதுவாக, ஒரு மின்னணு சாதனத்துக்கு நிறுவனம் ஒரு குறிப்பிட்ட கால உத்தரவாதம் வழங்கும். அந்தக் காலம் முடிந்த பிறகும் பாதுகாப்பு தொடர வேண்டும் என்றால், கூடுதல் தொகை செலுத்தி உத்தரவாதத்தை நீட்டிக்கலாம்.

இதன் மூலம் இயந்திர அல்லது மின்சாரக் கோளாறுகளால் ஏற்படும் பழுதுச் செலவுகள் ஈடு செய்யப்படுகின்றன.

**எதிர்காலத்தில் ஏற்படும் மாற்றம்!**

இந்தியாவில் இன்னும் பலருக்கு காப்பீட்டு பாதுகாப்பு கிடைக்கவில்லை. இந்தச் சூழலில், எம்பெடெட் காப்பீடு பொதுமக்களுக்கு எளிதாகக் காப்பீட்டை கொண்டு செல்லும் ஒரு முக்கியமான மாற்றமாகப் பார்க்கப்படுகிறது.

எதிர்காலத்தில், ஒவ்வொரு மின்னணு சாதனத்துடனும் காப்பீடு இயல்பான அம்சமாக மாறலாம். மக்கள் தனியாக காப்பீடு தேட வேண்டிய நிலை குறையும். இணைய விற்பனை நிறுவனங்கள், நிதி தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் இணைந்து புதிய சேவைகளை உருவாக்கும் வாய்ப்புள்ளது.

இன்றைய டிஜிட்டல் வாழ்க்கையில் மனநிம்மதி என்பது கூடுதல் வசதி அல்ல; அத்தியாவசிய தேவையாக மாறியுள்ளது. விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவது என்பது பணக்காரர்கள் என்பதைத் தாண்டி, சாமான்ய மக்களுக்கும் அவசியமாக மாறிவிட்டது. செல்போன், லேப்டாப் உள்ளிட்ட பொருள்கள் ஆடம்பரம் என்ற நிலையைத் தாண்டி அத்தியாவசியம் ஆகிவிட்டது. அந்தப் பொருள்களுக்கான பாதுகாப்பு என்பதும் தேவையாக இருக்கிறது. அந்தத் தேவையை எளிமையாகவும், மலிவாகவும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் புதிய முறையாக எம்பெடெட் காப்பீடு உருவெடுத்து வருகிறது.

இனி மக்கள் வாங்கும் ஒவ்வொரு சாதனத்துடனும் பாதுகாப்பும் சேர்ந்து வருவது சாதாரண விஷயமாக மாறும் காலம் தொலைவில் இல்லை.